**பொல்பிதிகம பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று 2018 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு அந் நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கை 2018 செப்டெம்பர் 28 ஆம் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொல்பிதிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணிகள் மற்றும் கட்டிடப் பிரதி ஆவணங்களை சீர் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா. 569,473 ஆன நாற் குறிப்புப் பதிவேட்டுடன் தொடர்புடைய திட்டவட்டமான சொத்தொன்று பௌதிகமாக கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 07 இன் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்காக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை சம்பள மீள் நிரப்பல் தொகை ரூபா.266,515 ஆனது கூடுதலாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முற்பணத்தொகை கணக்கின் மீதி ரூபா. 27,843,229 ஆக இருந்ததுடன் பரீட்சை நிலுவைகளுக்கு அமைய அது ரூபா. 30,937,065 எனவும் ஐந்தொகைக்கமைய ரூபா. 31,203,580 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக்கூற்றுகளில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 51,235,535 ஆக இருந்ததோடு, ஆத்தொகையில் ரூபா. 2,334,843 ஆனது ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து அறவிடப்படாது காணப்பட்டது. அதில் ரூபா. 2,303,360 ஓடு சம்மந்தப்பட்ட நிர்மான கடன்பட்டோர் கோவையில் குறைபாடுகள் காணப்பட்டதால் அத் தொகையை அறவிட முடியாதிருந்ததோடு, ஓய்வு பெற்ற செயலாளரினால் 2012 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா. 30,000 ஆன செலுத்தப்படாத முற்பணத்தொகையொன்றும் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 49,878,927 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளில் இருந்து ரூபா 10,458,780 ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து தீர்வு செய்யப்படாது காணப்பட்டன.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா. 601,864 ஆன 03 கணக்குப்பிரிவுகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கமைய | பெறுமதி<br>ரூபா. | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | --- | சபைக்குரிய பிரதேசத்திலுள்ள புதிதாக அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் அமைந்துள்ள சொத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 2 ஆம் திகதிய 1996 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | 103,200 | சபைக்குரிய பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகை தொடர்பாக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,636,803 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,126,043 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 316 | 438 | 424 | - | 2,336 | 2,257 | 2,257 | - |
| (ii) | வாடகை | 6,998 | 6,696 | 6,635 | 11 | 6,180 | 6,264 | 6,269 | 19 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,180 | 2,737 | 2,726 | - | 1,650 | 2,477 | 2,477 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 59,919 | 50,813 | 57,141 | 26,478 | 47,345 | 48,863 | 43,367 | 22,140 |
| | மொத்தம் | 69,413 | 60,684 | 66,926 | 26,489 | 57,511 | 59,861 | 54,370 | 22,159 |

**குறிப்பு**

2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 6,637,908 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் ரூபா 60 மில்லியனான வருமானம் பட்டியலிடப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டில் பெறப்பட்ட நிலுவை வருமானங்கள் உள்ளடங்கிய ரூபா 67 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 22 மில்லியன் ஆக இருந்த நிலுவை வருமானங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 26 மில்லியன் ஆகியிருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

சகல அடிப்படை வசதிகளுடனும் கூடிய 404 வியாபார நிலையங்கள் சபைக்குரிய பிரதேசத்தில் பல வருடகாலமாக இயங்கிக்கொண்டிருந்ததுடன் , வீதவரி வசூலிக்கப்பட சபையினால் நடவடிக்கைகள் எடுக்கபப்படிருக்கவில்லை என்பது 2018 ஜனவரி 12 ஆம் திகதி நடாத்தப்பட்ட வெளிக்கல பரிசோதணையின்போது அவதானிக்கப்பட்டது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையில் பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா. 9,829,875 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 6,094,287 ஆகவும் காணப்பட்டது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்படடிருந்த உப விதிகள் மற்றும் சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த 06 ஏற்பாடுகள் வெளிக்காட்டப்படும் விதமாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகளில் உக்கலடையாத கழிவுகள் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள இடத்தின் பின் பகுதியில் புதைக்கப்பட்டிருந்ததுடன் அந்நிலைமையின் காரணமாக எதிர்காலத்தில் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என அவதானிக்கப்படுகிறது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பான விரிவான அறிவை பெற்று அதற்கமைவாக சபைக்குரிய பிரதேச மக்களின் பல்வேறு தேவைகளுக்கான 08 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் கணக்குக் கொள்கைக்கமைய சகல வருமானங்களும் அட்டுரு செலவினத்திற்கமைய கணக்காக்கப்பட்டிருந்ததுடன் முத்திரை வரி சரியான அமைப்பொன்றில் கண்டுபிடிக்கப்படாது கணக்காக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியின் படி 1999 ஜுலை 13 திகதி வருடாந்தம் 2.5 சதவீதம் வட்டிக்கு இலங்கை உள்ளூராட்சி ஊழியர் சங்கத்தில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா. 50,000 ஆனது அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி மூன்றாம் நிலை பதவியொன்றில் 01 வெற்றிடமும், இரண்டாம் நிலை பதவியொன்றில் 08 வெற்றிடங்களும், முதலாம் நிலைப் பதவியொன்றில் 02 வெற்றிடங்களும் நிலவியதோடு, அங்கீகரிக்கப்பட்ட பணியணியினரையும் விஞ்சிய மேலதிக / ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு 09 ஊழியர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) சபையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவர் 2017 ஆம் ஆண்டு வாரத்தில் திங்கள் மற்றும் பதன் கிழமைகளில் மாத்திரம் காரியாலத்திற்கு வருகை தந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு சேவையில் பணியாற்ற வேண்டிய எஞ்சியிருந்த 143 நாட்களில் வருகையை உறுதிப்படுத்துவதற்காக கையொப்ப பதிவேடு / கைரேகை இயந்திரத்தில் அடையாளமிட்டோ அல்லது விடுமுறை பெற்று வெளியேரியதாகவோ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குரிய பிரதேசத்தில் அமைந்திருந்த தொலை தொடர்பு கோபுரம் தொடர்பாக மதிப்பாய்வொன்றுமேற்கொள்ளப்பட்டு வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லாததோடு கோபுரங்கள் அமைக்கப்படும் போது

அபிவுருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் இனக்கச் சான்றிதல் வழங்கள் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்படாததோடு அதனால் சபை நிதித்தொகைக்காக ஈட்டப்படக்கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக நெகும செயற்றிட்டத்தின் மூலம் அச்சுக் கல் பொறுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த தீகம பெவிலவத்த வீதியின் ஒரு பகுதிக்கு மீண்டும் 2016 ஆம் ஆண்டு சபை ரூபா. 491,020 நிதி செலவு செய்யப்பட்டு அச்சுக் கல் பொறுத்தப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட வீதியில் சபை நிதித்தொகை மற்றும் மக நெகும திட்டத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இடங்களை வேறுபிரித்தறிய முடியாமல் போனதுடன் அளவீட்டுப் பத்திரம் அப் பகுதிகளை இலகுவாக கண்டரிய முடியுமான வகையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் வேலைத்திட்டத்தை மேற்கொண்ட காலவரையரை, அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை, சம்பந்தப்பட்ட வேலைத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான காரணம் ஆகியன தொடர்பான தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கடந்த வருடமொன்றில் மானியத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்கெட்டியாகம வீதியில் அச்சுக் கல் கலன்றுள்ள இடங்களை மீண்டும் சீர் செய்வதற்காக ரூபா. 424,819 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறான வீதி அபிவிருத்தியுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு எழுத்தாவணம் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

சபை ஆரம்பத்திலிருந்து 2018 ஜனவரி 12 ஆம் திகதி வரையிலும் மயான பூமிகளை சுற்றி வேளிகள் அமைத்து பாதுகாப்பை உறுதி செய்யாததன் காரணமாக அத்துமீறிய குடியினர் மூலம் கைப்பற்றப்படல் அல்லது மயான பூமிகளாக காணப்படும் நிலப்பரப்பு ரீதியாக குறையும் பாதிப்புகளுக்குள்ளாகும் என அவதானிக்கப்படுகிறது.

### 3.6.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபைக்குரிய பிரதேசத்திலுள்ள 129 மயான பூமிகள் பிரதேச செயலாளரிடமிருந்ததோடு அவை சபையினால் கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபையினால் கைப்பற்றப்பட நடவடிக்கை எடுக்காமை மற்றும் அகற்றுவதற்கு மதிப்பாய்வறிக்கையை பெற்றுக்கொள்வதில் தாமதம் எனும் காரணங்களால் 09 வாகனங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டது

### 3.6.4 வாகனப் பயன்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை பிரதேசத்திற்குள் பாதைகள் அமைப்பது மற்றும் அவற்றை பேணுதலுக்காக டம்ப் ட்ரக் வாகனம், மோட்டார் கிரேடர் இயந்திரம், பெகோ இயந்திரம் மற்றும் வீதி பதப்படுத்தும் கருவி இருந்ததுடன் இயந்திர உபகரண அதிகார சபை உள்ளடங்கிய வெளி நிறுவனங்களிடமிருந்து வாடகைக்குப் பெற்று 05 சந்தர்ப்பங்களில் ரூபா. 610,606 ஆனது செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சாரதிகள் பாவணை செய்து முடிந்த ஓட்டக் குறிப்புக்களின் இரண்டாம் பிரதி பிரிவுக்குப் பொறுப்பான எழுதுனரிடம் அல்லது சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் பொறுப்பேற்கப்படாமல் மீண்டும் புதிய ஓட்டக் குறிப்புக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் 04 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் பரிசோதிக்கப்படாது எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகை

### 3.7.1 பெறுகை திட்டம்

பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகை வழிகாட்டல் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வழங்கள் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் விதிமுறைகள் மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 207 ஆம் விதிக்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூபா. 484,667 பெறுமதியான 08 கொள்வனவுகள் ஓரே நிருவனத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 12 சந்தர்ப்பங்களில் 02 நிருவனங்களில் ரூபா. 388,949 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சந்நை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கொள்வனவு செய்யும் போது குறைந்தபட்சம் 03 விலைப் பெறுமானங்களாவது இருக்கவேண்டியள்ளதோடு, கிடைக்கப் பெற்றுள்ள ஒரு விநியோகத்தரின் விலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு 04 சந்தர்ப்பங்களில் ரூபா. 3,189,554 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) ஒப்பந்த விநியோகத்தரொருவரின் விலையின் அடிப்படையில் 06 மாதத்திற்குள் மாத்திரமே மீண்டும் கொள்வனவுகள் மேற்கொள்ள முடியுமென்ற போதிலும், சபையினால் வருட ஆரம்பத்தில் ஒரு தடவை விலைப் பெறுமானங்களை கோரியதால்

பெறுகைக் குழுவின் முடிவின் அடிப்படையில் வருடம் முழுவதும் 14 தடவைகளில் ரூபா. 8,162,557 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) சபையில் பெறுகைக் குழுவொன்று காணப்பட்டதோடு கட்டுமானப் பணிகளுக்காக மாத்திரம் பெறுகைக் குழுவின் முடிவுகளை இயக்கியிருந்த நிலையில், ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்கையில் பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்யாது முகாமைத்துவக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் மீளாய்வாண்டில் 60 சந்தர்ப்பங்களில் ரூபா. 12,886,984 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.7.3 ஒப்பந்த நிருவாகம்

-------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொரவேருவ வத்த அஷோகாராமய 07 ஆம் ட்ரெக் வீதியிற்காக ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட அச்சுக் கல் பதிக்கும் நிர்மானப் பணியின் 05 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் வடிவமைத்தல் மற்றும் 06 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் வீதியின் இரு பக்க ஓரத்திலும் கொன்கிரீட் இடும்போது குறிப்பிட்ட விவரக் குறிப்பிற்கமைவாக இல்லாமையால் முறையே ரூபா. 20,850 மற்றும் ரூபா. 19,760 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தம்பகஹமுல சந்தியிலிருந்து அகார பன்ட்டி வீதி வரையில் வயலை ஊடறுத்துச் செல்லும் வீதியை சரளை கற்கள் இட்டு புணர்நிர்மானம் செய்வதற்காக ரூபா. 199,342 செலுத்தப்படடிருந்ததுடன், தம்பகஹமுல அந்தத்திலிருந்து பாதை கழுவிச் செல்லப்பட்டு சிதைவடைந்திருந்ததுடன் வீதி முழவதும் வேறுபட்ட அளவிலான குழிகள் தோன்றியிருந்தன.

(இ) பொதுவபிடிய வீதியில் அச்சுக் கல் பதித்து அபிவிருத்தி செய்யும் தொழிலின் 05 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் வளைவான (கர்ப்) வடிவமைத்தல் குறிப்பிட்ட விவரக் குறிப்பின்படி இல்லாத காரணத்தால் ரூபா. 18,324 ஆனது அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரம்பே மெத கொலணிய வீதியிலிருந்து தம்புவ ஹெனவ வீதி வரையில் சரளைக் கற்கள் இட்டு புணர்நிர்மானம் செய்வதற்காக ரூபா. 197,552 செலுத்தப்படடிருந்ததுடன், பாதையின் நடுவில் நீர் அடித்துச் செல்லப்படுவதால் வீதியில் இடப்பட்ட சரளைக் கற்கள் கழுவிச் செல்லப்பட்டு சிதைவடைந்திருந்ததுடன் வீதி முழவதும் வேறுபட்ட அளவிலான குழிகள் தோன்றியிருந்தன.

(உ) கும்புக்கடவல பொதானேகம சங்க மண்டபத்தின் அருகிலிருந்து நிபுனகம வரையிலான வீதி அச்சுக் கல் பதித்து அபிவிருத்தி செய்யும் தொழில்களின் 02 ம் இலக்க வேலை விடயத்தின் கீழ் கூட்டுத்தொகையாக ரூபா.52,950 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

------------------------------

சபையினால் உள்ளகக் கணக்காய்வுக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததோடு அந்த உத்தியோகத்தருக்கு வேறு பணிகளும் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டுக்குப் போதுமான உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படாததோடு 04 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் | (i) பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை<br>(ii) சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தாமை |
| (ஆ) கொள்வனவு செய்தல் | பெறுகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமை |
| (இ) செயற்றிட்டம்/ ஒப்பந்தம் | (i) போதிய அளவு மேற்பார்வை இல்லாமை.<br>(ii) தீர்மானிக்கப்பட்ட தரத்தில் நிறைவேற்றப் படாமை. |